முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 834

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.01.2022, திங்கட்கிழமை

1. பார்காக்க வந்த பரமானந்த சதாசிவ சற்குருவே
பழனி ஆண்டவன் என் மகா சக்தியாய் நிறைந்துள்ள தவகுருவே
சீர்திருத்தம் செய்து கலியுகத்தையே மாற்ற
சித்திமிகு ஞானியராய் வந்த அரங்கமகானே
2. மகான் உந்தனுக்கு சுப்ரமணியப்பெருமான் யானும்
மண்ணுலகில் ஞான அறிவுரை ஆசி தன்னை
வகைபட பிலவ சிலை திங்களில் வழங்குவேன்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 26ம் நாள், 10.01.2022 திங்கட்கிழமை)
அரங்கன் ஞானம் உலகைவெல்ல
3. உலகை ஆளும் அரங்கன் தர்மமப்பா
உலகையே வெல்லும் அரங்கன் சன்மார்க்கமப்பா
கலகமின்றி ஞானத்தலைமைகள் உருவாகி
கலியுகத்தில் உலகமே ஞான ஆட்சியாக மலரக்கூடும்
4. கூடுகின்ற இந்த அற்புதத்தை நடத்த
குருவாக அரங்கனை கலியுகத்தில்
ஈடேற்றம் ஆறுமுகன் யான் செய்துள்ளேன்
இணைந்து அரங்கனுள் யானிருந்து இயக்க
5. இயக்குகின்ற இந்த அற்புதத்தை உலகம்
ஏற்கின்ற காலம் தொட்டுதொட்டு
மாற்றம் ஞானயுகமாக பெறக்கூடும்
மக்களெல்லாம் ஞானவான்களாக உருவெடுக்க நேரும்
6. நேர்மைக்கொண்டு அரங்கன் தர்மத்தை
நீதிவழி பின்பற்றும் மக்களெல்லாம்
வறுமைவென்று வையகத்தில் மரணத்தையும் வென்று
வல்லமைபட ஞானவான்களெனும் புதுப்பொழிவோடு இனிதே
7. இனிதே மாதர்மத்தை வளர்த்து எல்லா திக்கிலும் உயிர்கொலை நீக்கும்
மகா சக்தி மிகுந்தவர்களாய் மாறி அரங்கன் தேடல்வழி
அகிலமெங்கும் ஞானியர்கள் பெருகி அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
அரங்கனைக்கொண்டு இந்த உலகமாற்றம் புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–